Registered as a Newspaper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2025    தை 24    (06-02-94)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 353

## சிறிலங்காவின் சுதந்திரதினத்தில் மட்டக்களப்பில் எதிர்ப்பு நடவடிக்கை

சிறிலங்கா சுதந்திர தினத்துக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. சிறிலங்காவின் 46-வது சுதந்திர தினத்தை நேற்று முன்தினம் மட்டக்களப்பில் கொண்டாட அரசு தனது படைகள் மூலம் நடவடிக்கை எடுத்திருந்தது: மட்டக்களப்பு மாவட்ட மக்களும், மாணவர்களும் சுதந்திரதின எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பாடசாலைகளும், கடைகளும் மூடப்பட்டன. மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர். இராணுவத்தினர் பாடசாலைக்குச் செல்லுமாறு ஒலிபரப்பி மூலம் மாணவர்களுக்கு உத்தரவிட்டனர். எனினும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை.

(6ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான பேச்சுவார்த்தைக்கு சுமுகமான சூழ்நிலை அவசியம்

## மெதடிஸ்த நல்லெண்ண குழுவிற்கு விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

**சமாதானப் பேச்சுவார்த்தை இடம்பெறுவதற்கு சுமுகமான சூழ்நிலை ஒன்று தேவை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் யாழ். வந்துள்ள மெதடிஸ்த திருச்சபை நல்லெண்ண குழுவிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. மேலும், இந் நல்லெண்ண சூழ்நிலை உருவாவதற்குப் போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடை நீக்கமும் அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டது.**

நேற்று மாலை 6-30 மணியளவில் ஆரம்பமான பேச்சுவார்த்தை சுமார் ஒன்றரை மணிநேரம் இடம்பெற்றது. இப்பேச்சுக்களில் மெதடிஸ்த திருச்சபைச் செயலர் வண. டிலீப்பெர்னாண்டோ, வண. நோர்மன் ரகறெட், சமாதானத்துக்கும் நீதிக்குமான தேசிய கிறிஸ்தவ ஆணைக் குழுவின் தலைவர் வண. எபநேசர் ஜோசப், இளைஞர் பிரதிநிதிகளான வண. அனில்சில்வா, வண. சுமித்திரா பெர்னாண்டோ. மெதடிஸ்த திருச்சபை உபதலைவர் திருமதி ஆன் அபயசேகரா, திருமதி டி. றோசா மற்றும்திருமதிபி ஜோசப்ஆகியோர் கலந்து கொண்டனர். விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், கல்விக்கழகத்தைச் சேர்ந்த பாலகுமாரன் ஆகியோரும்கலந்துகொண்டனர்.

போர்தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கும் வேளையில் சமாதானப்பேச்சுக்களை நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதை எடுத்துவிளக்கிய விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு போர் நிறுத்தம் தேவை என்பதைவலியுறுத்தினர் அத்துடன் தமிழ் மக்கள்மீது நீண்டகாலமாகத் திணிக்கப்பட்டுவரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நகரில் தீவிர தேடுதல் வேட்டை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் ஆங்காங்கே திடீர் சுற்றிவளைப்பு தேடுதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. நகரின் பல இடங்களிலும் பொலிசாரும் ராணுவத்தினரும் திடீர் சுற்றிவளைப்பு தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிடும் தமிழர்களின் வீடுகளும் கூட இராணுவத்தினரின் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது. இத்தேடுதல்களால் அங்கு பதற்றநிலை அதிகரித்துள்ளதாகவும், நகரில் மக்கள் நடமாட்டம் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மண்முனை வடக்குபிரதேச செயலகப்பிரிவிலுள்ள48 கிராமசேவை அதிகாரிகளை இராணுவ அதிகா

(6 ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் மெதடிஸ்த திருச்சபை நல்லெண்ணத் தூதுக் குழுவிற்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படம்.

## நாம் சமாதானம் நோக்கி படிப்படியாகவே நகரவேண்டியுள்ளது

அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ

## புலிகள் என்ற அச்சத்தால் பொலிசார் மீது சூடு

## ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களே பிரச்சினை

...தைவலியுறுத்தினர் அத்துடன் தமிழ் மக்கள்மீது நீண்டகாலமாகத் திணிக்கப்பட்டுவரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் மெதடிஸ்த திருச்சபை நல்லெண்ணத் தூதுக் குழுவிற்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படம்.

# நாம் சமாதானம் நோக்கி படிப்படியாகவே நகரவேண்டியுள்ளது

## அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை நோக்கி நாம் படிப்படியாகவே நகரக் கூடியதாக உள்ளது. எனவே இம்முயற்சிகள் முழுமையாக வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் செயலாற்ற வேண்டும் என நேற்று யாழ். வந்து சேர்ந்த ஆங்கிலத் திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்றுமாலை அவரது தங்குமிடத்தில் சந்தித்த எமது செய்தியாளரிடம் அவர் இவ்வாறு கூறினார்,

இன்று பெரும்பான்மை மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள், இந்த நிலையில் சமாதானப் பணியைத் தொடர்ந்து முன் கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. இம்மாதம் 15ஆம் திகதி வரை நான் யாழ்ப்பாணத்தில் தங்கவுள்ளேன். அக்காலத்தில் பல வகையிலும் சமாதானத்திற்கு என்னால் என்னசெய்ய முடியும் என்பதை அறிந்து செயற்படுவேன். சென்ற முறை நான்செய்த சுற்றுப்பயணம் ஓரளவு வெற்றியளித்தது. இம்முறை அதைவிட ஒருபடி முன்னேற்றம் அடையும் என எதிர்பார்க்கின்றேன் என மேலும் அவர் கூறினார்.

# ஆங்கிலத் திருச்சபை ஆயர் நேற்றுயாழ்வந்துசேர்ந்தார்

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு மறை மாவட்ட ஆயர் மேதகு கென்னத் பெர்னாண்டோ குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.

விமானமூலம் பலாலி வந்த இவர்கள், அங்கிருந்துவாதுவ கப்பல் மூலம் பருத்தித்துறை வந்தடைந்தனர்.

இக்குழுவில் ஆயரின் மனைவி திருமதி சித்திரா, கிழக்காசிய தேசிய கிறிஸ்தவ மன்றச் செயலர் அருட் கலாநிதி றியன்சி பெரேரா, யாழ்ப்பாண பகுதிக்கான அங்கிலிக்கன் திருச்சபை நிர்வாகி டொனால்ட் கனகரெட்ணம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

# இன்றைய நிலைக்கு அரசியல்வாதிகளேகாரணம்

## சர்வோதய தலைவர் கூறுகிறார்

(வடமராட்சி)

வடக்கு - கிழக்கில் இன்று ஏற்பட்டிருக்கும் நிலைக்கும், தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்ட நிலைக்கும் இன்றைய அரசியல்வாதிகளே முதற் காரணம். யாழ்ப்பாணத்திற்கு நேற்று வந்துசேர்ந்த சிறிலங்கா சர்வோதய சிரமதான சங்கத்தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரட்ணா எமது வடமராட்சி செய்தியாளருக்கு முன்கண்டவாறு தெரிவித்தார்.

நானும் உங்களைப்போன்ற சாதாரண மனிதன். நான் தற்போதைய பயணத்தை நட்பு ரீதியாக பயன்படுத்திக் கொண்டேன். வடக்கு - கிழக்கு மட்டுமல்ல நாட்டின் பலபகுதி மக்களும் ஆபத்திற்கு முகம் கொடுத்துள்ளனர். இதற்கெல்லாம் இன்றைய ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகளே பதில் சொல்ல வேண்டும்.

எமது சர்வோதய இயக்கச் செயற்பாடுகளைக்கூட இந்த அரசாங்கம் நான்கு வருடங்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் என்ற அச்சத்தால் பொலிசார் மீது சூடு

## ஒருவர் பலி; ஐவர் காயம்

(கொழும்பு)

திருக்கோணமலையில் நடந்த ஒரு துப்பாக்கிச்சண்டையில் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார். ஐந்து பேர் படுகாயமடைந்தனர். இத் துப்பாக்கிச்சூட்டை புலிகள் மேற்கொண்டதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

ஆனால் பொலிசார் ஒருவரே தனது சக பொலிசாரைப் புலிகள் என்று நினைத்துப் பயந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் ஒரு பொலிசார் கொல்லப்பட்டதாக திருக்கோணமலை மாவட்டப் பொலிசார் கூறியுள்ளனர்.

### இன்னும் பல பூநகரிகள் இழக்கப்படுமானால்

# உயரதிகாரிக்கு எதிராக சிப்பாய்கள் ஆயுதத்தை திருப்ப நேரிடும்

(கொழும்பு)

கடந்த இரண்டு தசாப்தங்களாக சிறிலங்கா தனது அரசியல் இராணுவத் தலைமைகளின் தவறுகளால் பெருமளவு இரத்தத்தை விலையாகக் கொடுத்துள்ளது. சிறிலங்கா இன்னும் பல பூநகரிகளை இழப்பது தொடருமானால் அதனால் ஏற்படும் விரக்தி, சாதாரண இராணுவச் சிப்பாயைத் தனது மேலதிகாரிகளுக்கு எதிராகத் துப்பாக்கியைத் திருப்பவைக்கும் என கொழும்பு பத்திரிகையொன்று தெரிவிக்கிறது.

மேலும் அப்பத்திரிகையில், புதிய இராணுவத் தளபதி இராணுவத்தைவிட்டு வெளியேறிவிட்ட முன்னாள் தளபதிகளின் தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். யுத்தத்தில் தங்களைத் திறமைசாலிகளாக நிரூபித்தவர்களை முன்னாள் தளபதி பதவி உயர்த்தத் தவறிவிட்டார். புதிய தளபதி நண்பர்களையும், ஆதரவாளர்களையும் உறவினர்களையும் பதவி உயர்த்துவதன்மூலம் இராணுவத்தை பலவீனப்படுத்தக்கூடாது. இராணுவ அரசியல் தலைவர்களின் தவறுகளால் சிறிலங்கா போதிய அளவு இரத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# டென்மார்க் அருகே நீரிணையில் 36 தமிழ் அகதிகள் தத்தளிப்பு

(கொப்பன்ஹேகன்)

டென்மார்க்கிற்கும் சுவீடனுக்கும் இடையில் ஓர்சண்ட் நீரிணையில் இரவு முழுவதும் தத்தளித்துக் கொண்டிருந்த முப்பத்தாறு தமிழ் அகதிகள் கடந்த வியாழனன்று மீட்கப்பட்டனர். இவர்கள் கப்பலொன்றிலிருந்து டிங்கிகளில் இறக்கி விடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடலில் கடும் குளிரிலும் காற்றிலும் சுமார் பன்னிரண்டு மணித்தியாலங்கள் இவர்கள் தத்தளித்ததாக கடல் மீட்புச் சேவைப் பிரிவினர் தெரிவித்தனர்.

முதல் மூன்று டிங்கிகளும் கொப்பன்ஹேகனுக்கு தெற்கேயுள்ள கோகே கரையோரமாகத் தரை ஒதுங்கியது. மற்ற இரு படகுகளும் கடலில் தத்தளித்ததை அவ

( 6ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களே பிரச்சினை

## லிபரல் கட்சி தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் முறையல்ல மாற்றப்படவேண்டியது அவரிடமுள்ள அதிகாரங்களே இன்று மாற்றப்படவேண்டியது என லிபரல் கட்சித் தலைவர் சானக அமரதுங்க தெரிவித்தார்.

சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் பேற்படி கருத்தைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இன்று முக்கிய பிரச்சினையாக அமைந்துள்ளது. அரசியல் அமைப்பில் ஜனாதிபதி தெரிவுசெய்யப்படும் முறையல்ல உண்மையாகவே ஜனாதிபதியின் அதிகாரங்கள்தொடர்பான விவாதமே முன்னணிவகிக்கின்றது. எனவே ஜனநாயகத்தை மீள பன்முகப்படுத்தும்போது ஜனாதிபதி தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றுவதைவிட ஜனாதிபதிக்குள்ள அதிகாரம் வரையறைசெய்யப்படவேண்டும்.

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

# கடலில் மிதந்து வந்த வெடிபொருள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்டக் கடலில் மிதந்து வந்த வெடிப் பொருள் ஒன்று மீனவர் ஒருவரால் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

அலம்பில் பகுதிக் கிராமத்தினைச் சேர்ந்த மீனவர் மணலாறு - அலம்பில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது இந்த வெடிப் பொருள் கடலில் மிதந்து வந்தது.

கடந்த சில வாரங்களாக மணலாறு - அலம்பில் கடலில் வெடிப் பொருள்கள் அடிக்கடி மிதந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலில் மிதந்து வரும் பொருள்களை மக்கள் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அப்பகுதி மீனவர்களைக் கேட்டுள்ளனர். தமிழ் மீனவர்களைக் கொல்லும் நோக்கத்துடனேயே இந்த வெடிப் பொருள்களைச் கடலில் மிதக்க விட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# 6500 பரல் மண்ணெய்யுடன் மாகோ இன்று வரும்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான பாடப்புத்தகம் 6500 பரல் மண்ணெண்ணெய் மற்றும் 200 பரல் மலத்தியோன் பவுடர் ஆகியவற்றுடன் மாகோ கப்பல் கடந்த வியாழக்கிழமை கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்டதாகவும் இன்று பருத்தித்துறைதுறைமுகத்தை வந்தடையுமெனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

தற்போது கொழும்புத் துறைமுகத்தில்வைத்துகடுமை

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## சைனீஸ் உணவு சேவை

மதியஉணவு-மீன், இறைச்சி, முட்டை, மரக்கறி - 11. 30- 2. 00 திருமணம், பிறந்த நாள், பிரியாவிடை, புரியாணி பிறைட் றைஸ், பிறைட் நூடில்ஸ், சிற்றுண்டி வகை நாட வேண்டிய முகவரி: KARUNIYA CHINESE HOTEL 166, 1ST CROSS STREET JAFFNA (7384).

## தவறவிடப்பட்டது

ஆனைக்கோட்டைச் சந்திக்கும், நவாலிக்குமிடையில் 3. 2. 94 அன்று மணிக்கூடு திருத்தும் ஆயுதங்களும் மூக்குக் கண்ணாடியும் தவறவிடப்பட்டுள்ளது; கண்டெடுத்தவர்கள் ரதிவாரிச் வேக்ஸ் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (7428)

## கணிதம் (O/L)

உயர் ஜித்திவடைய கணிதம் (O/L) தனித்தனி கற்கலாம். 35 வருட அனுபவ ஆசிரியர் கற்பிக்கின்றார் வி. கே. கந்தசாமி, புளியங்கிணற்றடி, ஏழாலை மேற்கு சுன்னாகம். (7432)

## பாலர் ஆசிரியர் பயிற்சி

கடைசித்தகைமை க.பொ. த. (சா/த) சனி ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (7427)

## நியமனம்

(பருத்தித்துறை)

கரவெட்டி அரசினர் மருத்துவமனைப் பொறுப்பு வைத்திய அதிகாரியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பதிவுவைத்திய அதிகாரி டாக்டர் ம. யோகீஸ்வரதேவன் சுகாதாரத்திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார் (25)

## விசேட கூட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துண்டி இந்து மயான பரிபாலன சபையின்விசேட ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4. 30மணிக்கு சபைத்தலைவர் திரு. ம.

# யாழ். இலங்கை வங்கி பொன்விழா காண்கிறது

(நல்லூர்)

இலங்கை வங்கி யாழ்ப்பாணத்தில் தனது சேவைகளை ஆரம்பித்து நாற்பத்தொன்பது ஆண்டுகள் பூர்த்தியடைந்திருப்பதைக் குறிக்கும் வைபவமொன்று அண்மையில் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் கொண்டாடப்பட்டுள்ளது.

இவ் வங்கியின் முகாமையாளர் திருமதி கே. துரைராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர், யாழ்ப்பாண ஆயர் ஆகியோரின் ஆசியுரைகளும், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல், திட்டமிடல் பணிப்பாளர் பத்மநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். டிவகலாலா, யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம், கல்விப் பணிப்பாளர் செல்வி பெரியதம்பி ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம் பெற்றன.

தமிழ் மக்களின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு இலங்கை வங்கி ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும் எனவும் பொதுமக்கள் தம்மிடமுள்ள பணத்தை வங்கியில் வைப்பு செய்யக்கூடிய வகையில் கட்டு நிதியை அதிகரிக்க வேண்டுமெனவும் வாழ்த்துரை வழங்கிய பலரும் வேண்டுகோள் விடுத்தனர்.

இவ் வைபவத்தில் யாழ். நகரில் இயங்கும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வாடிக்கையாளர் எனப் பலரும் சமுகமளித்து இருந்தனர். (17)

## முதன்மை ஆசிரியர் தெரிவுப் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம் வடக்கு வலய கல்வித் திணைக்களத்தில் முதன்மை ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்குமான எழுத்துப் பரீட்சை இன்று காலை நல்லூர் கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. விண்ணப்பித்த சகல ஆசிரியர்களும் தவறாது பரீட்சைக்குத் தோற்றும்படி கல்விப் பணிப்பாளர் கந்தசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.


மின்னொளியில்

**மாபெரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி**

நீர்வேலி ஐ. வி. கழகம் ஒவர் கேம், செற்றப் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம் (Basket Ball) போன்ற விளையாட்டுகளை நடத்துவதற்கு கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 15 - 2 - 94

தொடர்பு:
க. வி. கந்தசாமி
செயலாளர்
ஐ. வி. கழகம்
நீர்வேலி

(7422)



வடமராட்சி மென்பான விற்பனையாளருக்கு

**ஒரு நற்செய்தி!!**

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பானங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.

1. சாயி கிருஷ்ணா, வதிரி சந்தி, நெல்லியடி
2. வேலவன் ஸ்ரோஸ், பருத்தித்துறை

TASTE LINE
INDUSTRIES (PVT) LTD,



**4-ம் ஆண்டில் எழிலகம்**

மூன்றாண்டு சேவை நல்கி
நான்காம் ஆண்டு
சேவையை ஆரம்பிக்கும் வேளையில்
சகலரதும் கடந்தகால ஆதரவிற்கு
நன்றி செலுத்தி
எதிர்கால ஆதரவை
வேண்டுகின்றோம்.

**எழிலகம்**

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8521)


## நினைவு கூருகின்றோம்..

**1994-02-06**

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-பருத்தித்துறைப் பகுதியிற் காவற்கடமையிலீடுபட்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சேகர்** (அப்புக்குட்டி முத்துசேகர்-சந்திராகூடல், பொலிகண்டி-வல்வெட்டித்துறை)

கிளி-பரந்தன் பகுதியிற் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**பாலு/சிக்காக்கோ** (முருகேசு ஜெயகாந்தன்-கந்தரோடை, சுன்னாகம்-யாழ்)

இதே பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

வவுனியாவில் சிறிலங்கா ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள், தவசிக்குளம் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

யாழ்-பருத்தித்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள், வல்வை, பொலிகண்டி பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட அதே இடத்தைச்சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு யாழ்-வசாவிளான் பகுதியிற்

**கப்டன் ரகு** (சண்முகராசா பிறேம்குமார்- காட்டுக்குளம், திரியாய் - திருமலை)

**கப்டன் மகேஷ்** (சுப்பிரமணியம்முகுந்தன்- சாமாதுவின் - திருமலை)

**லெப். கிருபன்** (குமாரசாமி உதயகுமார்- 8-ம் வட்டாரம், சாம்பல்தீவு- திருமலை)

**லெப். கில்பேட்** (குவாநாட் கொன்ஸ்ரன்ரைன்ஸ்- சாம்பல்தீவு - திருமலை)

**2-ம்லெப். சாந்தன்** (நைனா முகைதீன் நியாஸ்- நிலாவெளி - திருமலை)

**2-ம் லெப். அசோக்** (பொன்னுத்துரை லிங்கேஸ்வரன் - திருமலை)

**2-ம்லெப். நவா** (செ. யோகராசா - கங்குவேலி- திருமலை)

**பைரவன்** (இராமசர்மி கணேசன் - திருமலை)

**காந்தி** (சித்திரவேல் சிவராசா - 2-ம் வட்டாரம், குச்சவெளி - திருமலை)

**விஜி** (பொன்னையா லம்போதரன் - குச்சவெளி திருமலை)

**சின்னமதி** (விஸ்வலிங்கம் செல்வேந்திரன் - மூதூர் -திருமலை)

சபையின்விசேட ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.30மணிக்கு சபைத்தலைவர் திரு.ம. சுந்தரலிங்கம் தலைமையில் ஈச்சமோட்டை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். (24)

## திருமுறைப் பண்ணிசைப் போட்டி

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை சமய அறிவை வளர்க்கும் நோக்குடன் நடாத்தும் திருமுறைப் பண்ணிசைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு முப்பது மணி தொடக்கம் யா/நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

## பால்கொள்வனவு நிலையம் திறப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கால்நடை வளர்ப்போரினதும், பால் கொள்வனவு செய்வோர்களினதும் நன்மை கருதி புலோலியிலுள்ள கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பால் கொள்வனவு விற்பனை நிலையமொன்றைத் திறந்துவைக்கவுள்ளதாக வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

பால் கொள்வனவு செய்வோரும், பால் விற்பனை செய்வோரும் தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய வடமராட்சி கால்நடை வளர்ப்போர்கூட்டுறவுச்சங்கத் தலைவரு (புலோலி)டன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கால்நடை வளர்ப்போரினதும், நுகர்வோரினதும்நன்மை கருதி கால்நடைச் சந்தை ஒன்றையும் திறந்து வைத்துச் செயற்படுத்தி வருவதும் குறிப்பிடத் தக்கது.

(25)

TASTE LINE INDUSTRIES (PVT) LTD,
14, Seenier Lane,
Jaffna.

(இ-8517)

## ஆண்டொன்று நினைவலைகள் எங்கள் அன்புச் சுமதிக்கு



மண்ணில் சுமதியாய்!

20-11-1965

விண்ணில் தெய்வமாய்!

)8 01.1993

### செல்வி சுமதி கந்தையா

(தொண்டர்ஆசிரியை தாவளை இயற்றாலை அ. த. க. பாடசாலை)

பாரை விட்டு பறந்து சென்ற சுமதி
வாரமென்ன வருடமென்ன காத்துநிற்போம் - உழியினிலே

சிரித்த முகத்துடன் சினக்காத சுமதி
சிட்டாய் பறந்து சென்று
ஆண்டொன்று கணப்பொழுதில் மறைந்ததம்மா!
ஆறவில்லை உன் நினைவு எம்மனதில்
உன் அன்பில் சேராத விழிகள் - இன்று
நினைவிற் சோராத விழிகளாய் நிற்கின்றன;
ஆண்டொன்றின் நினைவில் அனுப்புகின்றோம் - அன்பை
வான் வெளியில் அனுப்புகின்றோம் வாழ்த்தாக.

உன் அன்பு நினைவுடன் வாழும்,

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

- குடும்பத்தினர்.

(5087)

யாழ்-பருத்தித்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள், வல்வை, பொலிகண்டி பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட அதே இடத்தைச்சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1987ஆம் ஆண்டு யாழ்-வசாவிளான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வெள்ளை** (செபமாலை றெஜினோல்ட் ஜோன் குமார் - வெள்ளைவீதி, இளவாலை-யாழ்)

**அமுதன்/சிவா** (பேதுருப்பிள்ளை இராஜேஸ்வரன் ஊரெழு கிழக்கு, சுன்னாகம்-யாழ்)

**கபில்** (பரமசாமி உருத்திரசிங்கம் - விளானை, களபூமி-காரைநகர்-யாழ்)

1988ஆம் ஆண்டு யாழ்-பனிப்புலம் பகுதியில் இந்தியப்படையினர் கைது செய்ய முற்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

முன்னாள் வட்டுக்கோட்டைப் பிரதேசப்பொறுப்பாளரும், யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளருமான,

**மேஜர் பிரசாத்** (கந்தசாமி முரளிதரன்-'அஜந்தா' மூளாய்--சுழிபுரம்)

1989ஆம் ஆண்டு திருமலை-மூதூர், ஈச்சிலம்பத்தைப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**டெஸ்மன்** (செல்லத்துரை ரவீந்திரன்-மூதூர்-திருமலை)

வவுனியா-பூவரசங்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதக்குழுவினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**நேசன்** (கந்தசாமி நாகராசா - கட்டைக்குளம்-வவுனியா)

யாழ்-கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ரவிராஜ்** (ராஜசவுந்தரலிங்கம் கிரிதரன்-ரவிராஜ்வீதி, கொக்குவில்-யாழ்)

**யோகன்** (கந்தையா யோகநாதன் - திருநெல்வேலி தெற்கு-யாழ்)

இதே ஆண்டு தேசவிரோதக் குழுவினரால் கொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**செல்லத்துரை தனபாலசிங்கம்** (நவாலி,மானிப்பாய்-யாழ்)

1990ஆம் ஆண்டு திருமலையில் தேசவிரோதக் குழுவினரின் முகாமினை தாக்கிவிட்டு வருகையில் தமிழீழ கடற்பரப்பில் (ஜமாலியா) எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட படகுவிபத்தில் எமைப்பிரிந்த,

**மேஜர் கமல்** (கோபால் அருளானந்தம் - திரியாய்-திருமலை)

**மேஜர் மதி** (அருளம்பலம் வரதராஜன்-2-ம் வட்டாரம், குச்சவெளி:திருமலை)

**மேஜர் சுரேஸ்** (சின்னத்தம்பி தயாபதி-2-ம் வட்டாரம், நிலாவெளி-திருமலை)

**கப்டன் நேமி** (சண்முகம் பஞ்சலிங்கம்-2-ம் வட்டாரம், குச்சவெளி-திருமலை)

**கப்டன் அன்ரன்** (குப்பையன் இராமநாதன்-2-ம் வட்டாரம், குச்சவெளி-திருமலை)

**விஜி** (பொன்னையா லம்போதரன் - குச்சவெளி திருமலை)

**சின்னமதி** (விஸ்வலிங்கம் செல்வேந்திரன் - மூதூர் -திருமலை)

**குமார்** (புண்ணியமூர்த்தி சதீஸ்வரன் - திருஞானசம்பந்தர் வீதி - திருமலை)

**கருணா** (இராசையா வரதராஜா- நிலாவெளி- திருமலை)

**சின்னசுரேஷ்** (துரையப்பா இராஜேந்திரன் - சாம்பல்தீவு - திருமலை)

**ஜொனி** (வின்சன்ற் ஒஸ்வேல்-நிமல்ராஜ்- திருமலை)

**கப்டன் குகன்** (கந்தசாமி மகேந்திரன்- கரணவாய் தெற்கு, கரவெட்டி- யாழ்)

**2-ம் லெப். சங்கர்** (இராசரத்தினம் செல்வகுமார் - அராலி வடக்கு, வட்டுக்கோட்டை- யாழ்)

1991 ஆம் ஆண்டு யாழ்- தச்சன்காட்டுச் சந்தி சிறிலங்கா ராணுவ மினிமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தகர்ப்பு முயற்சியின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய,

**சுக்லா** (பாலசுப்பிரமணியம் முகிலன் - 260, கச்சாய் வீதி, சாவகச்சேரி- யாழ்)

1992 ஆம் ஆண்டு வவுனியா - நொச்சிமோட்டைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**லெப்.ஐயனார் - சிறீகாந்** (நாகசாமி மகேந்திரன் - சாளம்பைக்குளம் - வவுனியா)

**2-ம லெப்.சில்வெஸ்ரார் - கதிரொளி** (தர்மலிங்கம் கண்ணன் - பூவரசங்குளம்- வவுனியா)

**வினோதன்** (செல்வராசா சந்திரகுமார்-4-ம் கண்டம், ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

1993 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாமருகில் தடைகள்அகற்றவந்த சிறிலங்காஇராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். வெற்றி - மாயவன்** (சிவபாதசுந்தரம் விஜயராஜ் - செல்வநகர், ஆரையம்பதி- மட்டு)

மட்டு- ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மாணவிகள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட. ஒரு மாணவி.


ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8519)

# 22 வேங்கைகளின் நான்காம் ஆண்டு நினைவாக...


மேஜர் கமல்


மேஜர் மதி


மேஜர் சுரேஸ்


கப்டன் நேமி


கப்டன் ரகு


கப்டன் குகன்


கப்டன் மகேஷ்


கப்டன் அன்ரன்













லெப்டினனட்
**கில்பேட்**

லெப்டினன்ட்
**கிருபன்**

2-ம் லெப்டினனட்
**சங்கர்**

2-ம் லெப்டினனட்
**அசோக்**

2-ம் லெப்டினனட்
**சாந்தன்**

2-ம் லெப்டினனட்
**நவா**



வீரவேங்கை
**சின்னமதி**



வீரவேங்கை
**குமார்**



வீரவேங்கை
**பைரவன்**



வீரவேங்கை
**கருணா**

வெற்றி, வெற்றி என்ற சேதி
எங்கள் காதில் வீழ்ந்தது
பொங்கி மகிழ்ந்து தமிழ்மண்
சிரித்து நின்றது - இடையில்
எங்கிருந்து வந்தது
அந்த சோக கீதம்?
திருமலை மண் காத்த
உயர்ந்த உயிர் மூச்சுக்கள் நின்று
இதயங்களை பிழியும் என்று?
யார் நினைத்தது...
நினைவுகள் கண்ணீர் துளிகளாய்
கன்னங்களில் வழிய
உம் பாதச் சுவடுகளில் - உங்கள்
கனவுகளை சுமந்தபடி
இதோ நாங்கள்.



வீரவேங்கை
**காந்தி**



வீரவேங்கை
**சின்ன சுரேஷ்**



வீரவேங்கை
**ஜோனி**



வீரவேங்கை
**விஜி**

**- நண்பர்கள்**

(ஸ-8520)

# மாணவர்களின் அறிவு அகலமாக நூல்களை வாசிக்க வேண்டும்

**- கலாநிதி க. அருணாசலம்**

(தென்மராட்சி)

மாணவர்கள் பரீட்சைக்கு தேவையான நூல்களை மாத்திரம் கற்காமல் அறிவுப் புலத்தை அகலமாக்கும் வகையில் பல நூல்களையும் வாசிக்க வேண்டும். வாசிப்பதுடன் நின்று விடாது நல்ல நூல்களைச் சேகரித்து இல்லங்கள்தோறும் வைத்திருக்கவேண்டும். இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க. அருணாசலம் தெரிவித்தார் அண்மையில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மண்டபத்தில் அமரர் சரவணமுத்து ஆறுமுகம் நினைவுப் பேருரையை நிகழ்த்திய அவர் தொடர்ந்துஉரையாற்றுகையில்

வாசித்த மனிதனாகவும்; தசாவதானியாகவும் விளங்கியஅமரர் சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள் அரிய பல நூல்களை சேகரித்து தமது இல்லத்தில் நூலகம் ஒன்றையேவைந்திருந்தார். தென்மராட்சிப் பகுதியில் புத்தகங்களை இரவல் கொடுக்கும் முதலாவது நூலகமாக அதுவிளங்கியது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கூடஇல்லாத அரிய பல நூல்களை இந்த நூல் நிலையத்தில்காணக்கூடியதாக இருந்தது. இப்புத்தகங்களை இரவல்கொடுத்து தென்மராட்சியின் கல்விவளர்ச்சிக்கு அவர்பெரிதும் உதவியுள்ளார். எனது கலா நிதிப் படிப்புக்கு கூட அவரிடம் நான் இரவல் வாங்கிப் படித்துள்ளேன்.

ஒரு புகையிரதம் தான் சென்றடைய வேண்டிய இடத்தை அடைவதற்கு தண்டவாளத்திலேயே நிற்க வேண்டும்; அதேபோல மாணவர்களும் உயர்கல்வி என்ற இலக்கை அடைய தளராத உறுதியுடன் தடுமாற்றமின்றிக் கற்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். அவரைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி சி. கருணானந்தமும் உரைநிகழ்த்தினார். இவ்வைபவத்தில் பெருந் தொகையான கல்விமான்கள், மாணவ மாணவிகள் போன்றோர் கலந்து கொண்டனர் (86)

## அலுவலகம் திறப்பு

பருத்தித்துறை வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள அலுவலகம் திறந்துவைக்கப்பட்டுச் செயற்படத் தொடங்கியுள்ளது. நெல்லியடியில் திறந்துவைக்கப்பட்டுள்ள இத்திணைக்கள அலுவலகம் இப்பகுதிக்குட்பட்ட வீதிகள் அமைத்தல், பராமரித்தல் போன்ற வீதிகள் அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் அலுவலகம் இதற்கு முன்னர் யாழ்ப்பாண அலுவலகத்துடன் இணைந்து செயற்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

## மிதிவெடியில் காலிழந்தார்

தும்பளைப்பாய் வயற்பகுதியில் உள்ள தனது வயலைப் பார்க்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்கி தனது கால் ஒன்றை இழந்தார்.

கம்பளை சுழிபுரத்தில் வசிக்கும் வைரவன் மனோகரராஜா (வயது 22) என்பவரே தமது வயலைப் பார்க்கச் சென்ற சமயம் பாதையில் கிடந்த மிதிவெடி

## நிப்பொன்மாறு பயணம் 21 இலங்கையர் பங்கு

(கொழும்பு)

உலக இளைஞர் நட்புறவுக்கான நிப்பொன்மாறு கப்பல் சுற்றுலாவில் இம்முறை 21 இலங்கையர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். ஜப்பானிய பிரதமரின் அலுவலகம் நடத்தும் இப்பயணத்தில் கலந்து கொள்ளும் இலங்கையரில் 10 பேரை தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், 11 பேரை கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரகமும் தெரிவு செய்துளளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டரை மாதம் நீடிக்கும் இப் பயணத்தின்போது நிப்பொன்மாறு கப்பல் நேபாளம், ஓமான், செனகல், ஐக்கிய அரபு இராச்சியம், பிரிட்டன் கென்யா, இந்தியா, பிலிப்பைன்ஸ், எகிப்து, ஹெலன்ஸ் குடியரசு, ஜோர்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 292 இளைஞர் யுவதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். சிங்கப்பூர், மொஸாம்பிக், கிறீஸ், இந்தியா ஊடாக திரும்பவும் டோக்கியோ சென்றடையும்.

## மாகாண தேர்தல் பிரசாரம் அநுராவின் பொறுப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் 24ஆம் திகதி நடைபெறவுள்ள தென் மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்திற்கு பொறுப்பாக உயர்கல்வி அமைச்சர் அநுரா பண்டார நாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் அமைச்சரான றொனி டி மெல்லும் இத் தேர்தல் பிரசாரவேலைகளில் ஐ. தே. க சார்பில் முக்கிய பொறுப்பினை ஏற்றுள்ளார்.

இத் தேர்தல் பிரசாரத்தை உரிய முறையில் நடத்தி ஐ. தே. க வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்த ஏனைய அமைச்சர்கள் மற்றும் ஐ. தே. க எம். பிகளுடன் அநுரா தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## அமெரிக்க நிறுவனங்கள் அரசாங்கம் மீது அழுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் மீது அமெரிக்க நிறுவனங்கள் தொடர்ந்து அழுத்தங்களை ஏற்படுத்தி வருவதாகவும், மறைமுகமான முட்டுக்கட்

அமெரிக்க நிறுவனங்களின் இத்தகைய அழுத்தங்களால் அரசாங்கம் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வருமெனவும் எனவே இத்தகைய அழுத்தங்களை இந்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06 . 07 . 1911

மறைவு:
18 . 01 . 1993

திதி:
06 . 02 . 1994

### மூத்ததம்பி கந்தையா

மட்டுவிலூர் மூத்ததம்பி கந்தையா மாநிலத்தை விட்டகன்ற ஆண்டுநா ளின்று


பாசமுடன் பரிந்து பாரில் பக்குவமாய் வளர்த்தாய் ஐயா
நேசமுடன் நிழலாய் நின்றாய் நீயகன்ற நெடுந்துயர் நீங்கோம்
மாசடைந்த மணியாய் மண்ணில் மயர்வடைந்தோ மாயினும் உன்றன்
ஆசிலுயி ரீசன் தாளை அடையவென் றேத்துதும் யாமே.

சாள்ஸ் வீதி,
மட்டுவில் தெற்கு.

குடும்பத்தினருடன்
பத்மாவதி- சிவரஞ்சன்,
தேவபாலன்- சோபிதா

(7419)

## 5-ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு :
03.11.1969

வீரச்சாவு:
06.02.1989

### வீரவேங்கை யோகன்
(கந்தையா யோகநாதன்)

கள்ளம் சிறிதுமில்லா வெள்ளை மனத்துடனே
உள்ளம் திறந்தெவர்க்கும் உள்ள கதை பேசி
மின்னல் என எம்மைவிட்டு எங்கே மறைந்தீரோ
மண்ணில் நீ மறைந்தாலும் கண்ணில் நீ நடமாடும்
காட்சி தான் மறந்திடுமோ எண்ணமதில் எங்களுடன் வாழ்கின்றாய்.

உன்பிரிவால் ஆறாத்துயரில் நீறாகும் நெஞ்சங்கள்

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், சித்தப்பாமார்,
சின்னம்மாமார், மாமாமார்,
மாமிமார், உற்றார்,

'யோகன் வீதி',

## விளம்பரங்கள் சேகரிப்பாளர்


தமிழீழத்தில் வெளியாகும் சஞ்சிகை ஒன்றுக்கு ஒழுங்காக விளம்பரங்களை சேகரித்து வழங்கக்கூடிய விளம்பர முகவர் தேவை.

விளம்பரங்கள் சேகரிப்பதில் ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். சேகரித்துத் தரப்படும் விளம்பரங்களின் அடிப்படையில் தரகு வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி- 12. 02. 1994
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

விளம்பர இல. 310
மே/பா ஈழநாதம் (சி- 8515)

## 6-ம் ஆண்டு நினைவலைகள்



### மேஜர் பிரசாத்
(கந்தசாமி முரளீதரன்)

(முன்னாள் வட்டுக்கோட்டை பிரதேசப் பொறுப்பாளரும் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளரும்)

தாயின் மடியில் 18- 09- 1962
தாயக மண்ணில் 06- 02- 1988

தாய் மானம் காத்த தன்மானப் புலியே
விடிவாகும் முன்னே முடிவானதேனோ
மணியான தம்பி பிரபாவின் கொள்கை வேரூன்றும் வேளை
அழகான சமதர்ம தமிழீழமொன்று விடிவாகும் நாளை
அடைவாயே அமைதி -- வீரப் பிரபாவின் புலியே.

ராஜா (வயது 22) என்பவரே தமது வயலைப் பார்க்கச் சென்ற சமயம் பாதையில் கிடந்த மிதிவெடி வெடித்ததில் தமது காலை இழந்தவராவார். இச்சம்பவம் நேற்று முன்தினம்காலைநடந்தது. (ச), (கி)

அமெரிக்க நிறுவனங்கள் தொடர்ந்து அழுத்தங்களை ஏற்படுத்தி வருவதாகவும், மறைமுகமான முட்டுக்கட்டைகளை பிரயோகித்து வருவதாகவும் கொழும்பு பத்திரிகை கவலை வெளியிட்டுள்ளது.

க்கு முகம் கொடுக்க வேண்டி வருமெனவும் எனவே இத்தகைய அழுத்தங்களை இந் நிறுவனங்கள் கைவிடவேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், சித்தப்பாமார்,
சின்னம்மாமார், மாமாமார்,
மாமிமார், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

'யோகன் வீதி',
திருநெல்வேலி தெற்கு.

(7424)

அழகான சமதர்ம தமிழீழமொன்று
விடிவாகும் நாளை
அடைவாயே அமைதி -- வீரப்
பிரபாவின் புலியே.

வட்டுக்கோட்டை (7399) உறவினர்களும், நண்பர்களும்.


குறுகிய மழைக்கால இடைவெளியின் பின் மீண்டும்
இதோ முதல் தொகுதி இரட்டைச் சூட்டடுப்புகள்
உங்கள் விறகினை மீதப்படுத்த தயாராகி விட்டன

நீங்கள் இதுவரை கட்டிக் கொள்ளவில்லையா?
இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்



# இரட்டைச்சூட்டடுப்பு

உங்கள் விறகையும் பணத்தையும் மீதப்படுத்துவதோடு
தூய்மையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகிறது


- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட செயலகங்கள்
- கிராமிய உற்பத்திக்குழு வட்ட அலுவலகங்கள்
- எமது முகவர் நிலையங்கள்

(வாரத்தில் சகல நாட்களிலும் பதிவு செய்து கொள்ளலாம்)

"சக்திப் பகுதி"
த. பொ. மே. நிறுவனம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தமிழீழம்.

(கி-8514)


## 4-ம் ஆண்டுநினைவலைகள்



**கப்டன் குகன்**
**(கந்தசாமி மகேந்திரன்)**

அன்னையின் மடியில் 10-06-1964 — மண்ணின் மடியில் 06-02-1990


தேடித் தேடி மக்கள் அழ
திகைத்தே பெற்றோர் சோர்ந்து விழ
வாடி உற்றார் உறவினர்கள்
வற்றாக்கண்ணீர் வடித்தலற
ஈடும் எடுப்பும் இல்லாத
வீரப்புலியாய் களமாடி நின்ற
நாடு புகழ் கப்டன் குகன்
நல்வேங்கை எமைப் பிரிந்த துயர்
தீரும் தமிழீழ விடிவதிலே.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய 22 போராளிகளுக்கும் எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (7403)

குடும்பத்தினர்
உற்றார், உறவினர்கள்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை பா. முகிலன் (சுக்ளா)**

தமிழீழ மண்ணில்: 20-03-1973 — தமிழீழ மீட்பில் 06-02-1991

பாலசுப்பிரமணியம் தம்பதி பெற்றெடுத்த
பாலகனே முகிலா
சிறுவனாய் எம்மனையில் திரிந்தாய் வளர்ந்தாய்
வீரம் விளைக்க விளைநிலம் வேண்டும் என்று
வேங்கையாய்ப் போனவனே முகிலனே 'சுக்ளா'
வித்தானாய் எம்மினத்தின் விடிவுக்காய் - மீண்டும்
முளையாவாய் முகிழ்த்தெழுவாய் எம்மிடையே

குடும்பத்தினர்:
65, குமாரசாமி வீதி,
யாழ்ப்பாணம். (7412)
260, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

சமத்துவத்தை நாடி நாம் நடத்திவரும் பரம்பரை போராட்டத்தில், தரத்தைப் பறிகொடுத்து விடக்கூடாது.
— ஆட்லாப் ஸ்டீவன்ஸன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-0?-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## சிங்களப் பேரினவாதியின் மற்றுமொரு பிரகடனம்

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் சுதந்திர தின உரையானது 'வேதாளம் முருங்கை மரத்தில் இருந்து இறங்கத் தயாராக இல்லை' என்பதையே காட்டுவதாய் உள்ளது. அண்மைக் காலத்தில் சிறிலங்காவின் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான சமாதானத் தீர்வு பற்றிப் பேசியபோது சிலர் வேதாளம் முருங்கை மரத்திலிருந்து இறங்க முற்படுவதாகவே கருதினர். ஆனால் டி. பி. விஜேதுங்கா இச்சந்தேகத்தை முற்றாகவே நீக்கி விட்டார். இந்த வகையில் டி. பி. விஜேதுங்கா ஏனையவர்களை விட வித்தியாசமானவர்தான்.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் ஆயுதப் போராட்டம் குறித்து சுதந்திர தின உரையில் குறிப்பிட்ட டி. பி. விஜேதுங்கா, வடக்கு - கிழக்கில் உள்ள பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினையே. மிகவும் கொடூரமானதாகக் காணப்படும் இப்பிரச்சினையை, பயங்கரவாதிகளின் கோரிக்கையை நிர்மூலம் ஆக்குவதன் மூலம் இனவாதக் கொள்கைகளையும், குறுகிய அரசியல் ஆதிக்கத்தையும் முறியடிக்க முடியும்'' எனத் தெரிவித்துள்ளார்.

டி. பி. விஜேதுங்காவின் இவ்உரையானது, இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைத் தவிர வேறு எதையும் அரசாங்கம் நாடவோ, அன்றி சிந்திக்கவோ தயாராக இல்லை என்பதைக் காட்டுவதாகவே உள்ளது. அதாவது, அண்மையில் ரணில் விக்கிரமசிங்கா சமாதானம் பற்றிப் பேசியவற்றில் அர்த்தம் எதுவும் இல்லை என்பதையும், அது தமிழ் மக்களையும், உலக அரங்கையும் ஏமாற்றும் ஒரு நடவடிக்கை என்பதையும் டி. பி. விஜேதுங்கா தெளிவாகவே தெரிவித்து விட்டார்.

இதேவேளை, 'பயங்கரவாதிகளின் கோரிக்கைகள் அழிக்கப்பட வேண்டும்' என்ற டி. பி. விஜேதுங்காவின் அறிவிப்பானது, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மட்டும் தொடர்புடையதல்ல. தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமை தொடர்பான விடயத்திலும் அவரது எண்ணத்தை வெளிப்படுத்தும் ஒன்றாகவும் உள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரை

## வடக்கு, கிழக்கு பகுதியிலிருந்து வெளியேற்ற வேண்டும்

### - பிக்கு முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரை வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று பௌத்த தேசாபிமான பிக்கு பெரமுன சிறிலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான தீர்மானம் ஒன்றை இப் பிக்கு முன்னணியின் பிக்குகள் அனைவரும் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர். களனியில் நடைபெற்ற இம் முன்னணியின் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் செயற்படும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் விடுதலைப் புலிகளுக்கு உதவி வருவதாகவும் இதற்காகவே அவர்களை வெளியேற்ற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் எந்தவிதமான சமரசப் பேச்சுக்களிலும் ஈடுபடக்கூடாதெனவும், விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்கி ஒழிக்க கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டு அனைவரும் உதவவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெங்கமுவ நாலந்த தேரோ என்னும் பிக்கு ஒருவர் சிலுமின பத்திரிகைக்கு பேட்டியளிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் போர் நடத்தி இரத்தம் சிந்த முப்பதாயிரம் பிக்குகள் தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் மேலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து சிங்கள இளைஞர் யுவதிகளுக்கும் இராணுவப் பயிற்சி அளிக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## கட்டாக்காலி நாய் ஒழிப்பு மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பது தொடர்பான வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

நாய்களை வளர்ப்போர் தத்தமது நாய்களை வீட்டு வளவுக்குள் அல்லது கட்டி வைக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர் என மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தெருவில் அல்லது பொது இடங்களில் காணப்படும் நாய்களை பிடிக்குமாறு சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகவும், நாய்களைப் பிடிப்போருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

அத்துடன் வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய்த் தடுப்பு மருந்து ஏற்றும் நடவடிக்கைகளும் விரைவில் மீண்டும் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசர்நாய் கடித்தமையால் ஏற்படும் நோயின் தாக்கம் 1990—92-ம் ஆண்டு காலப் பகுதியில் இப்பகுதியில் மிக அதிகமாக இருந்தது தெரிந்ததே.

### புதிய நூல்கள் கொள்வனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை பொதுசன நூல் நிலையத்திற்குச் சுமார் 1,50,000 ரூபாவுக்குப் புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இப் பொதுசன நூல்நிலையத்தில் இரவல் கொடுக்கும் பகுதியின் செயற்பாடுகள் கடந்த சில மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நகரசபை தெரிவித்துள்ளது. (25)

## அரசியல்வாதிகளின் சேவையில் ராணுவ உயர் அதிகாரிகள் கவனம்

### சிரேஷ்ட அதிகாரிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயர்இராணுவ அதிகாரிகள் இராணுவ சேவைக்கு தம்மை அர்ப்பணிப்பதை விட அரசியல்வாதிகளின்சேவைக்கு தம்மை அர்ப்பணிப்பதே அதிகமாக இருக்கின்றது. இதனை உயர் இராணுவ அதிகாரிகள் நிறுத்த வேண்டும். இவ்வாறு பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு சுட்டிக்காட்டியுள்ளனர். இவ் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ள விடயங்களில் மேலும் சில வருமாறு

விடுதலைப்புலிகள் தமிழ் மக்களுடன் நெருக்கமாகக் கொண்டிருக்கும் தொடர்பை முறியடிக்கக் கூடிய வகையில் யுத்தம் தொடர்பான உண்மை நிலையை மக்களுக்கு தெரியப்படுத்தி மக்களின் விருப்பை பெற்றுக் கொள்ள வேண்டும் இதற்காக பத்திரிகைகள் மற்றும் செய்தித் தொடர்பு சாதனங்களின் உதவி பெறப்பட வேண்டும்.

இராணுவத்தினருக்கு தேவையான ஆயுதங்களை கொள்வனவு செய்யும் போது நடைபெறும் பாரிய ஊழலையும் வீண்விரயத்தையும் தடுக்

## சிகரட் கிடைக்கவில்லையென விமானப்படையினர் புகார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த ஆயி

தும் தொடர்ந்து வழங்கப்படவில்லையென இவர்கள்தமது புகாரில் மேலும் தெரிவித்துள்ளனர்-

மார்ச் மாதத்தின் பின்னர்

## ஈராக்கின் இராணுவ பலம் போருக்கு முந்திய நிலையில்

### அமெரிக்க சஞ்சிகை தகவல்

ஈராக்கிய இராணுவம் வளைகுடாப் போருக்கு முந்திய தனது இராணுவ பலத்தை மீண்டும் பெற்றுவிட்டதாக அமெரிக்க சஞ்சிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

யு எஸ். நியூஸ் அன் வேர்ல்ட் றிப்போர்ட் என்ற அச் சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில், யுத்தத்திற்கு முன்பாக ஈராக்கிடம் 5500 சோவியத் தயாரிப்பான டி.57 மற்றும் டி. 59 ரக டாங்கிகள் இருந்தன. இப்போது டி, 72 ரக நவீன சோவியத் டாங்கிகள் 2500 ஈராக் வசம் உள்ளன. விமானப்படையில் 400 யுத்த விமானங்கள் இருப்பதுடன் ஈரானிற்கு தப்பிச்சென்ற விமானங்களை மீளப்பெறவும் ஈராக் முயற்சிக்கின்றது. மேலும் 200 ஆயுத சாலைகளையும் ஈராக் கட்டி யெழுப்பியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

## செலவை கண்காணிக்க தனி அலுவலர் நியமனம்

### தேர்தல் ஆணையக அறிவிப்பு

(சென்னை)

தேர்தல்களின் போது வேட்பாளர்கள் செலவிடும் தொகைகளை கண்காணிக்க தனிப் பார்வையாளர்களை நியமிக்க தேர்தல் ஆணையகம் முடிவு செய்துள்ளது தேர்தல்களில் பணபலத்தால் வாக்காளர்களை திசை திருப்பும் முயற்சிகளை முறியடிப்பதற்காக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இந்திய தேர்தல் ஆணையகத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மாநிலத் தலைமைச் செயலாளர்கள்மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகள் ஆகியோருக்கு இது பற்றி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் என அழைக்கப்படும்இந்த அதிகாரிகள், தேர்தல்கள் சுயேட்சையாகவும் அமைதியாகவும் நடைபெறுவதை கண்காணிக்கும் மத்திய பார்வையாளர்களின் அதிகாரங்களைக் கொண்டிருப்பர் எனவும், தேர்தல் செலவினப் பார்வையாளர்களின் அறிக்கைகள் பொது மக்களின் தகவலுக்காகப் பிரசுரிக்கப்படும் எனவும் தேர்தல் ஆணையகம் மேலும் கூறியுள்ளது.

### ஆர்ப்பாட்டம்

சென்னையிலுள்ள அமெரிக்க அரசின் கான்சவேட் அலுவலகம் முன்பாக காங்கிரஸ் கட்சியின் இளைஞர்கள் நேற்று முன் தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் அண்மையில் இந்தியாவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்ததைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

## கெயிற்றிக்கு எதிராக பொரு. தடைக்கு முயற்சி?

(வாசிங்டன்)

கெயிற்றி தீவுகளுக்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடை விதிப்பது பற்றி ஐ நா. பரிசீலனை செய்ய வேண்டும் என்று, அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, ஸ்பெயின் ஆகிய நாடுகள் கோரிக்கை விடவுள்ளன. ஐ நா பாதுகாப்பு சபையின் அடுத்த மாத கூட்டத்தொடரின் போது இக் கோரிக்கை விடப்படலாம் என தெரியவருகிறது

கெயிற்றியிலுள்ள இராணுவ ஆட்சியாளர்களுக்கும், அவர்களது ஆதரவாளர்களுக்கும் எதிராக கடுமையான பொருளாதாரத்தடை விதிக்கப்படவேண்டும் என்று கோருவதில் அமெரிக்கா ஆரம்பத்தில் தயக்கம் காட்டிய போதும் பின்னர் இணக்கம் கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழக மீனவருக்கு தொலைத்தொடர்பு வசதி

ஆழ்கடல் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு

யோ தொலைபேசி வசதியுடன் கூடிய நிலையமொன்று

அறிவிப்பானது, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மட்டும் தொடர்புடையதல்ல. தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமை தொடர்பான விடயத்திலும் அவரது எண்ணத்தை வெளிப்படுத்தும் ஒன்றாகவும் உள்ளது.

இராணுவ ரீதியில் சிறிலங்கா அரசாங்கம் தான் விரும்புவது போன்று முழுமையான இராணுவ வெற்றியை ஈட்டினாலும், இறுதியில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதே அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும். அதாவது, இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் ஓர் அரசியல் தீர்வு அவசியமானது என்பதாகும். இதற்கு தமிழ் மக்கள் பல அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதும், அவர்கள் உரிமை மறுக்கப்பட்டுள்ளதையும் அவர்கள் ஏற்றுள்ளதுமே காரணமாகும்.

ஆனால், டி. பி. விஜேதுங்காவின் நிலைப்பாடானது, இராணுவத் தீர்வின் மூலம் விடுதலைப் புலிகளை மட்டுமல்ல, தமிழ் இனத்தையுமே அழிக்க வேண்டும் என்ற ரீதியிலேயே இருக்கின்றது. அதாவது, புலிகளின் கோரிக்கைகள் அழிக்கப்பட வேண்டும் என்பதற்கு தமிழர்களின் கோரிக்கைகள் அழிக்கப்பட வேண்டும் என்பதே பொருளாகும் ஏனெனில், விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள தமிழீழக் கோரிக்கைக்குத் தளமாக உள்ளவர்கள் தமிழ் மக்களே. ஆகையினால், கோரிக்கையை அழித்தல் என்பது தமிழ் மக்களை அழித்தலேயாகும் இவ் அழிப்பின் மூலமே தமிழீழக் கோரிக்கையைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதே டி. பி யின் திட்டமாகும்.

டி.பி.விஜேதுங்காவின் திட்டத்தின் பிரகாரம் தமிழர் தேசிய இனம் தனது தேசிய இனப்பண்பை இழக்க வேண்டும். அது சிதறடிக்கப்பட வேண்டும். சிறிலங்கா அரசிற்கு எதிராகப் போராடும் ஆற்றலைத் தமிழர்கள் இழக்க வேண்டும், இதன் மூலம் தமிழர்கள் பௌத்த-சிங்களப் பேரினவாதத்தின் கீழ் இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கைகட்டி, வாய் பொத்திச் சேவகம் செய்ய வேண்டும் என்பதே டி. பி. விஜேதுங்காவின் குறிக்கோளாகும்.

ஆனால், டி. பி. விஜேதுங்காவினதோ, அன்றிச் சிங்களப் பேரினவாதத்தின் இந்நோக்கமும் குறிக்கோளும் தமிழருக்குப் புதியதொன்றல்ல. தமிழ் மக்கள் அறியாதது மல்ல. ஆனால், இது சிங்களப் பேரினவாதம் சமாதானத்திற்குத் தயாராக உள்ளது. சிங்களப் பேரினவாத தலைமை தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முற்படுகின்றது எனக்கருதி முயற்சிப்பவர்களுக்கு இது பிரச்சினையின் ஆழத்தை புரிய வைக்க கூடியதென்றால், சிங்கள அரசுடன் ஒட்டி உறவாடி பிரச்சினையைத் தீர்க்கலாம் எனக் கருதுபவர்களுக்கு இது படிப்பினையும் ஆகும்.

## விமானப்படையினர் புகார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த ஆயிரத்தி நூறுக்கும் அதிகமானவர்கள் கடந்த வருடம் மார்ச் மாதத்திற்கு பின்னர் தமக்கு சிகரட்டுகள் கிடைக்கவில்லையென புகார் செய்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினருக்கு தேவையான சிகரட்டுகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே. மார்ச் மாதத்திற்கு முன்பாக இரு மாதங்களிலும் தலா 200 சிகரட்வீதம் வழங்கப்பட்டபோதும் தொடர்ந்து வழங்கப்படவில்லையென இவர்கள்தமது புகாரில் மேலும் தெரிவித்துள்ளனர்.

மார்ச் மாதத்தின் பின்னர் சிகரட் பற்றி கேட்கப்பட்ட இரு தடவைகளில் எண்ணூறு ரூபா வழங்கப்பட்டதாகவும் இதன் பின்னர் அது வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் வங்கியில் இப்பணம் வைப்பு செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ள போதும் எந்த வங்கியில் எந்தக் கணக்கில் இப்பணம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவரவில்லை எனவும் இப் புகாரில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## கசிப்பு வைத்திருந்தவருக்கு நீதிமன்று அபராதம்விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக நாலுபேருக்கு யாழ் மாவட்ட நீதிமன்றம் 79 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு பணித்துள்ளது.

மேற்படி தண்டம் செலுத்துமாறு நீதிமன்றினால் பணிக்கப்பட்டவர்களில் மூவர் முன்பும் இதே குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவர்கள் எனவும் ஒருவர் முதல் முறை குற்றம் இழைத்தவரெனவும் தெரியவருகின்றது.

மூன்று போத்தல் கசிப்பை வைத்திருந்த குற்றத்திற்காகவும் இவர் முன்பும் இதே குற்றமிழைத்து நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டும் மீண்டும் அக்குற்றத்தை புரிந்ததால் 35 ஆயிரம் ரூபா தண்டமாக செலுத்துமாறு யாழ் மாவட்ட நீதிமன்றினால் பணிக்கப்பட்டுள்ளது. இவர் இதை கட்ட தவறுமிடத்து 1400 நாட்கள் (4 வருடம்) கட்டாய சமூகசேவை செய்யவேண்டுமெனவும் பணிக்கப்பட்டது.

இதேவேளை ஆனைக்கோட்டையை சேர்ந்த நபர் ஒருவருக்கும் கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. தண்டப்பணம் கட்டத்தவறின் 1000 நாட்கள் கட்டாய சமூகசேவை செய்யவேண்டுமெனவும், கோண்டாவிலை சேர்ந்த பெண் ஒருவர் இக்குற்றம் புரிந்ததால் 7 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தவேண்டுமெனவும் நீதிமன்றினால் பணிக்கப்பட்டது இவர்கள் இருவரும் முன்பும் இக்குற்றமிழைத்ததற்காக நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே குற்றத்தை முதல் முறை புரிந்த ஆனைக்கோட்டைவாசி ஒருவருக்கு 12ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு பணிக்கப்பட்டது, கட்டத்தவறின் 480 நாட்கள் இவர் கட்டாய சமூகசேவை செய்யவேண்டுமெனவும் பணிக்கப்பட்டார்.

மேற்படி குற்றம் தொடர்பான விசாரணைகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றது. (சி)

தொடர்பு சாதனங்களின் உதவி பெறப்பட வேண்டும்.

இராணுவத்தினருக்கு தேவையான ஆயுதங்களை கொள்வனவு செய்யும் போது நடைபெறும் பாரிய ஊழலையும் வீண்விரயத்தையும் தடுக்கக் கூடிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

யுத்தத்தில் மரணமடையும் படையினரின் இறுதிக்கிரியைகள் தொடர்பிலும் கூட இராணுவ உயர் அதிகாரிகள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளனர். இவை நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் பூநகரி நாகதேவன்துறை கூட்டுப்படை முகாம் தாக்கப்பட்டதை தொடர்ந்து தான் இராணுவத் தளபதி ஜெனரல் சிசில வைத்தியரட்ண பதவி துறந்தாரா என்பது குறித்தும் தெளிவற்ற நிலை இராணுவத்தினர் மத்தியில் காணப்படுவதாகவும், பாரிய தாக்குதல் நடந்தால் உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்படுவதால் பாரிய தாக்கங்களும் பின் விளைவுகளும் ஏற்படுவதாகவும் இவ் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இறைச்சிக்கு விலை நிர்ணயம்

(குருநகர்)

குடாநாட்டில் கடந்த சனிக்கிழமை முதல் மாட்டிறைச்சியின் விலை சகல இடங்களிலும் ஒருகிலோ 80 ரூபாவாக இருக்குமென இறைச்சிக்கடை உரிமையாளர்கள் கூட்டாகப் பகிரங்க அறிவித்தல் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ 100 ரூபா விற்பனை செய்யப்பட்ட நிலை மாறி கடந்த சில தினங்களாக நாவாந்துறையில் 80 ரூபாவாகவும், குருநகரில் 60 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுவந்தன.

மாடு கொள்வனவு வியாபாரிகள், இறைச்சிக்கடை வர்த்தகர்களைப் பாதிக்காத விதத்தில் சகல இடங்களிலும் இறைச்சியின் விலையை 80 ரூபாவாக தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (21)

## தமிழக மீனவருக்கு தொலைத்தொடர்பு வசதி

ஆழ்கடல் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு உதவும் நோக்குடன் தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் கடலிலிருந்து தகவல் அனுப்பும் திட்டமொன்று செயற்படுத்தப்பட விருப்பதாகத் தமிழக மீன்பிடித்துறைத் துணை இயக்குநர் கூறியுள்ளார்.

இதற்காகத் தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் ரேடியோ தொலைபேசி வசதியுடன் கூடிய நிலையமொன்று அமைக்கப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அவசர கால நிலைகளின்போது மீனவர்கள் இந்த நிலையத்திற்கு உதவி கோரி தகவல் அனுப்பலாம் எனவும், மீனவர்களுக்கும் கடலிலே வைத்து பதில் தகவல் அளிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய - பாக். பேச்சுகளில் வெளி.தலையீடு வேண்டாம்

- டாக்டர் மன்மோகன்சிங்

(ஜெனீவா)

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான காஷ்மீர் பிரச்சினையில் மத்தியத்துவம் வகிக்க வெளியார் எவரும் தேவையில்லையென இந்திய நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

ஜெனீவாவில் செய்தியாளர்கள மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான எல்லாப் பிரச்சினைகளுக்கும் சிம்லா ஒப்பந்தப்படி தீர்வுகாண முடியும் எனவும் அவ்வகையில் ஓர் அமைப்பு ஏற்கனவே இருப்பதாகவும் தெரிவித்தார்

பாகிஸ்தானில் நேற்று இடம்பெற்ற பொது வேலை நிறுத்தம் தொடர்பாக குறிப்பிடுகையில் இந்திய எதிர்ப்பு பிரசாரம் ஒன்றை நடத்த வேண்டிய தேவை பாகிஸ்தான் பிரதமருக்குஅவரதுஉள்நாட்டு நெருக்கடிகளால் ஏற்பட்டிருப்பதை இந்தியா புரிந்து கொள்வதாகத் தெரிவித்தார். அத்துடன் பிரச்சினைகளுக்கு போர்மூலமாக அன்றி பேச்சுக்கள் மூலமாகவே தீர்வு காணப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை நாட்டின் வடக்கு-கிழக்கு பகுதியில் கிளர்ச்சியாளர்களுக்கு பாகிஸ்தானின் முப்படை உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ உதவிவழங்கி வருவதாக உளதுறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் குற்றம் சாட்டி இருக்கிறார்.

## யெல்ட்சினின் நிலை குறித்து ரஷ்ய அமைச்சர் கவலை

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் மிகவும் பாதிக்கப்பட்டவர் போன்று காணப்படுவதாகவும், தனிமை அவரை ஆட்கொண்டிருப்பதாகவும் ரஷ்ய சமூக பாதுகாப்பு அமைச்சர் எலாபம்பிலோவோ தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில்; தனக்கு ஆதரவாக இருக்கக் கூடியோர் மிகச்சிலரேஎன்று யெல்ட்சின் கருதுவதாகவும், தனித்துவிட்ட உணர்வு அவரிடம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

# உணவுத்தட்டுப்பாட்டை நீக்கும் அதிகாரம் எனக்கு இல்லை

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கைவிரிப்பு

(வடமராட்சி)

உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதோ அல்லது கூடுதல் உணவு வகைகளை அனுப்பி வைப்பதற்கோ எனக்கு அரசாங்கம் அதற்குரிய அனுமதியை வழங்கவில்லை. இவ்வாறு நேற்று யாழ். வந்து சேர்ந்த மேலதிக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையா பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து ஈழநாதம் வடமராட்சி செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுகள் இல்லாமலும் கஷ்டப்படுவதையும், கூடுதல் விலை கொடுத்து உணவுப்பொருள்களை பெற்று வருவதையும் நான் அறிவேன். ஆனால் இந்த மக்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கின்ற உணவுத் தட்டுப்பாட்டை நீக்கவோ கூடுதல் உணவுகளை அனுப்பவோ எனக்கு அதிகாரம் தரப்படவில்லை.

யாழ். மாவட்டத்திற்கு கூடுதல் உணவுப் பொருள்களை அனுப்புவது அரசியல் விடயம். அவர்கள் தான் இது பற்றிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நான் இன்று இரண்டு நோக்கில் யாழ். வந்திருக்கிறேன். இதில் ஒன்று குடும்ப நலன் விடயம். மற்றது உணவுப் பொருள்கள் பற்றிய விடயம்.

யாழ். செயலகத்தில் உணவு நிலை பற்றி அறிவதற்காக வந்துள்ளேன். உணவு விபரப் பட்டியல் ஒன்றை தயார் செய்து எடுத்துச் செல்லவுள்ளேன். இங்கு தேவையான உணவுப் பொருள்களும், இதுவரை அனுப்பி வைத்த உணவுப் பொருள்களின் தொகைகள் பற்றிய மதிப்பீடு எடுத்துச் சென்று மேலதிகாரிகளிடம் கொடுப்பதுதான் எனதுபணி

யாழ். அரசாங்க அதிபரும் இங்கு ஏற்பட்டிருக்கும் உணவு பற்றாக்குறை பற்றியும் இதனால் மக்களுக்கு ஏற்பட்டு வரும் கஷ்டநிலை பற்றியும் ஆணையாளருக்கு அடிக்கடி தெரிவிப்பார் என்றார். (யோ)

## அரச அதிபர் சிபார்சுடன் கிராம சேவகர் நியமனம்

(நமதுநிருபர்)

கிராமசேவகர் போட்டிப் பரீட்சையில் சித்திஎய்தியும் பொலிஸ் அறிக்கைபெற வேண்டும் என்பதில் இழுபறியில் உள்ள கிராமசேவகர்களது நியமனம் தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அமைச்சரவைக்கு இப்பிரச்சினையை கொடுத்துள்ளது.

அமைச்சரவையிடம் சம்பந்தப்பட்ட கிராமசேவகர்களது நியமனத்தை அரசாங்க அதிபரின் சிபார்சு கடிதத்துடன் செய்வதற்கு வெகுவிரைவில் அனுமதி கிடைக்குமென அரசாங்க அதிபர் தெரிவித்தார். (சி)

## மேஜர்கணேஷ் உருவப்படம் திறப்பு

மத்தியகுழு உறுப்பினரும் மூதூர்பிராந்திய தளபதியுமாகிய மேஜர் கணேஷ் (சித்திரவேல் சிற்றம்பலம்) திருவுருவப்படம் இன்று பிற்பகல் 4-00 மணிக்கு திருநெல்வேலியில் திரைநீக்கம் செய்யப்படவுள்ளதுடன் நினைவஞ்சலி கூட்டமும்நடைபெறவுள்ளது.

## பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தாதிகள் பயிற்சி கல்லூரிக்கு கற்கும் நிலை தாதிகளை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை ஒரு மாத காலத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

இத்தாதிகள் பயிற்சிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் தவிர மேலும் யாராவது விண்ணப்பிக்க விரும்பினால் அது தொடர்பான மேலதிக விபரங்களை யாழ் அரசாங்க அதிபரிடம் பெறலாம். (சி)

## ஆதாரம் காட்டி பெறவும்

யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலய மாணவர் இருவரால் 10-01-94-ல் இப்பாடசாலைக்கு அண்மையில் கண்டு எடுக்கப்பட்ட மோதிரம் பாடசாலை அதிபரினால் யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை எவரும் உரிமைகோரப் படவில்லை. எனவே உரிமையாளர்கள் இதனை தகுந்த ஆதாரம்காட்டி அரசியல் துறை யாழ். மாவட்ட செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

## உதைபந்தாட்டம்

யாழ், மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் மாவட்ட ரீதியான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய அரை இறுதிப் போட்டியில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தைஎதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இப்போட்டி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் பி. ப. 3.00 மணிகக்கு நடைபெறவுள்ளது.

## உ யரதிகாரிக்கு

தத்தை விலைகொடுத்துவிட்டது. இன்னும் பல பூநகரிகளை சிறிலங்கா இராணுவம் இழக்குமானால் சாதாரண இராணுவச் சிப்பாய்கள் மேலதிகாரிகளுக்கு எதிராக துப்பாக்கியைத் திருப்ப வேண்டி ஏற்பட்டுவிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய

களாக முடங்கவைத்தது. எமது செயற்பாடுகளை முற்றாக புறக்கணித்தது. அதனால் நாங்கள் எமது சங்கங்கள் மூலமாக சர்வோதய செயற்பாடுகளை துரிதப்படுத்த முடியவில்லை.

## சமாதான

பொருளாதாரத் தடைகளும் நீக்கப்பட்டு ஒரு சுமுகமான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டால் அது சமாதானப் பேச்சிற்கு ஏற்றதாக அமையும் எனவும் விடுதலைப்புலிகள் எடுத்துக்கூறினர்.

அரசாங்கத்தின் கடுமையான இராணுவப் போக்கையும் இனவாதப் பிரகடனங்களையும் கண்டித்த விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் அரசு தரப்பில் ஒருஅடிப்படையான மனமாற்றம் நிகழ்ந்தால்தான் சமாதான வழிமுறையில் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு சாத்

# ஜனாதிபதி பதவியை பாதுகாக்க தமிழ் மக்களை அழிக்கத் திட்டம்

**- அரசண்ணா**

தனது பதவியை காப்பாற்றவேண்டும் என்றால் சிங்கள மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டவேண்டும் அதற்கு தமிழனை அழிக்க வேண்டும். சிங்கள மக்களை திருப்தி அடைய செய்ய வேண்டும் என்பதற்காக யாழ். குடாநாட்டின் மீது பாரிய படை எடுப்பை நடத்த திட்டம் திட்டப்படுகின்றது. தனது பதவியை காப்பாற்ற எம் மக்கள் மீது பாரிய படையெடுப்பை நடத்தி சிங்கள மக்களுக்கு பொய் பிரசாரம் செய்து திசைதிருப்ப அரசு திட்டம் தீட்டி வருகின்றது. இவ்வாறு தென்மராட்சிக் கோட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் நேற்று இரவு கெருடாவில் குட்டி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்ற தச்சன்காடு மினிமுகாம் தகர்ப்பில் வீரச்சாவு எய்திய 36 மாவீரர்களின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா அவர்கள் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இந்த மினிமுகாமில் வீரச்சாவடைந்த 36மாவீரர்களின் சாவு தமிழ் தேசிய வெளிப்பாட்டை உலகரங்கில் வெளிப்படுத்தி நிற்கின்றது. எமது போராட்டத்தில் இதுவரைக்கும் 6150ற்கும் மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்துள்ளார்கள். ஆனால் இதுவரை அநியாயமாக 45,000 மக்கள் இறந்துள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானோர் யுவதிகள், இளைஞர்கள் இவர்கள் ஆயுதம் ஏந்தி போராடியிருப்பின் இந்த அநியாய சாவுகள் தடுக்கப்பட்டு இருக்கும். என்றார்.

விடுதலைப் புலிகளின்மூத்த உறுப்பினர் தேவர் அவர்கள் கூறுகையில், இந்தமண்ணிலே அதாவது யாழ் குடாமீது அரசு ஒரு பாரிய தாக்குதலை நடத்தப் போகின்றது. ஆனால் மக்கள் புலிகள் காப்பாற்றுவார்கள் என்று பேசாதிருக்கக் கூடாது. நீங்கள் செய்ய வேண்டியது உங்களை நீங்கள் பாதுகாக்க அனைவரும் ஆயுதம் ஏந்த வேண்டும். இதுதான் எமது அறைகூவல் என்றார்.

யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு எழிழன் அவர்கள் உரைநிகழ்துகையில் இம்மாவீரர்கள் எம் மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் தம்உயிரை துச்சமென மதித்து வீரகாவியம் படைத்தார்கள். ஆனால் அவர்கள் சாகும் போது ஒன்றை மட்டும் எமது மக்களிடம் விட்டுச் சென்றுள்ளார்கள். தனது கையில் விழும் ஆயுதம் ஒரு புதிய போராளியிடம் சேரவேண்டும் என்பதே. எனவே இக்கனவை மக்களாகிய நீங்கள் நனவாக்க வேண்டும் என்றார்.

யாழ். மாவட்ட மகளிர் துணைப் பொறுப்பாளர் செல்வி தேன்மொழி அவர்கள் பேசுகையில்;

இம் மாவீரர்களுடைய இந்த நினைவு நாளில் நாம் எமது போராட்டத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளோம். எமது தலைவரின் காலத்திலே போராடி தமிழீழத்தைப் பெறவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் முதலிக்ஈகைச்சுடரை யாழ்.மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் திரு. இளையவனும் தென்மராட்சி கோட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் செல்வி தயாழினியும் ஏற்றி வைத்தனர்.

இறுதியில் தென்மராட்சிக் கோட்ட கலைபண்பாட்டுக் கழகத்தினரின் 'விடிவது தெரிகின்றது' என்னும் நாடகம் இடம் பெற்றது. (86)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

05.02.1994

எமது பகுதியில் உள்ள கடைசி இலக்கம்: 610

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்: இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0403, 26-8878, 26-2545, 28-4183, 27-3910, 41-6187, 41-9167, 26-7627, 24-1542, 26-6984, 26-0502, 42-9345, 24-9938, 24-5734, 24-6699, 41-9663.

## JAFFNA COLLEGE Annual Prize Giving

Our Annual Prize - Giving will take place on Saturday 12 February, 1994 at 4-00 p. m., in the College Quadrangle.

## தசாக கிருகயக்ஞ அழைப்பிதழ்

அன்புடையீர்!

ஸ்ரீமுக வருட தை மீ 15உ (28-01-94) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எனது மகன்

**பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் சுவாமிநாதக் குருக்கள்**

அவர்களின் அந்தியக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம்: தைமீ 24உ (06-02-94) ஞாயிற்றுக்கிழமை

ஏகோதிஷ்ட மாசியம்: தைமீ 25உ (07-02-94) திங்கட்கிழமை

சபிண்டீகரணம்: தைமீ 26உ (08-02-94) செவ்வாய்க்கிழமை

கிருகயக்ஞம்: தைமீ 27உ (09-02-94) புதன்கிழமை

மேற்படி கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கிரியாகுரு: பிரம்மஸ்ரீ ஞானம் உபாத்தியாயர்.

கல்வயல்,
சாவகச்சேரி.
(5089)

இங்ஙனம்
திருமதி சா. பஞ்சாட்சரக் குருக்கள்
சகோதரர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

ஆசிரியர் கலாசாலை (பலாலி) விரிவுரையாளர் திரு. இ. மருதலிங்கம் அவர்களின் பாசமுள்ள தந்தையார்

**உயர்திரு. மூத்தவர் இராமநாதர்**

in the
College Quadrangle.
CHIEF GUESTS
THE RT. REV. KENNETH M. FERNANDO
and
Mrs. CHITRA FERNANDO
Parents, Alumni, Friends and well wishers
are cordially invited.

Vaddukoddai. G, RAJANAYAGAM
4-2-1994 (கி-8566) Principal

யாழ்.
பல்கலைக்கழக கலைப்பீட
மாணவர்கள் வழங்கும்
"பொய்க்கால்"
(நாடகம்)

இடம்: யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
காலம்: 06-02-94 (இன்று) பி.ப. 4-30 மணி

அன்பளிப்பு 10/-

குறிப்பு,- இந்நாடகம் யாழ். குடாநாட்டில் 12-வது தடவையாக மேடையேறுகின்றது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர உதவி:-
மாரியம்மன் மோட்டோர்ஸ்
• கோப்பாய்.
உரிமையாளர்:- சு. மகேஸ்வரன்

(7437)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

னால் நாங்கள் எமது சங்கங்கள் மூலமாக சர்வோதய செயற்பாடுகளை துரிதப்படுத்த முடியவில்லை.

தென்பகுதியில் இருக்கின்ற சாதாரண கிராம மக்கள் தமிழ்மக்கள் மீது எந்தவிதமான வெறுப்பும் காட்டுவதில்லை. அப்படியான சுபாவத்தைக் கொண்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு ஒரு சுமுகமான நிலையையே விரும்புகிறார்கள். தமிழ் மக்களை உறவுகளாகவே மதிக்கிறார்கள்.

இங்கு ஏற்பட்டிருக்கின்ற இனப்பிரச்சினை பற்றிப்பேசுவதற்கு எனக்குசக்திஇல்லை. நான் ஒரு சாதாரண மனிதன். இங்கு வந்து நான் இங்குள்ள நிலைமைகளை அவதானித்து தென்பகுதியில் தெரியவைப்பதோடு இது பற்றி என்னால் முடிந்ததைச் செய்ய முயல்வேன்.

யாழ்ப்பாணத்திற்கு நான் வருவதற்குக்கூட அரசாங்கம் விரும்பவில்லை. அனுமதிக்காக அரசிடம் விண்ணப்பித்திருந்தும் அரசு மறுத்திருந்தது. பல மாதங்களாக விண்ணப்பித்த எனக்கு இப்பொழுதுதான் அனுமதி கிடைத்திருக்கிறது. இங்குவந்த நான் இரண்டொரு தினங்கள்தான் தங்கியிருப்பேன். கொழும்புக்குச்சென்றதும் மீண்டும் ஒரு தடவை வருவேன்.

அரசியல்வாதிகளிடம் ஏற்பட்டிருக்கும் தன்னலம் காரணமாகவே இன்று இந்தநாடு சீரழிந்துபோகக் காரணம் என்றார். (யோ)

## மட்டக்களப்பு

ரிகள் அழைத்து மட்டக்களப்பு நகரம் உட்பட பல்வேறு பகுதிகளிலுள்ள வீடுகளில் வசிப்போர் தொடர்பான விபரங்களைத் திரட்டிவழங்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

தால்தான் சமாதான வழிமுறையில் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு சாத்தியமாகும் எனவும் எடுத்து விளக்கினர்.

கிறிஸ்தவ தூதுக்குழுக்களின் சமரச முயற்சிகளை வரவேற்ற விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் தென்னிலங்கை அரசியல்வாதிகளிடமிருந்தே சமாதானத்திற்கான நல்லெண்ணமும் பிறக்க வேண்டும் எனவும் எடுத்துரைத்தனர்.

பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட மெதடிஸ்த திருச்சபைக் குழுவினர் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அரசிற்கு எடுத்து விளக்குவதாகத் தெரிவித்தனர்.

## டென்மார்க்

தானித்த மீட்புச் சேவையினர் படகுகளில் இருந்த பயணிகளை ஹெலிக்கொப்டர் மூலம் மீட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

எந்தக் கப்பலில் இருந்து இந்த டிங்கிகள் இறக்கப்பட்டன என்பதைக் கண்டறிய பொலிசார் இந்த அகதிகளை விசாரணைக்கு உட்படுத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைத் தமிழ் அகதிகளின் புகலிடத்துக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 100 தமிழ் அகதிகள் உண்ணாவிரதம் மேற்கொண்ட வேளையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இப்போது சுமார் 400 இலங்கைத் தமிழ் அகதிகள் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளனர். ஏற்கனவே 100 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவர்கள் விரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அனைவரும் ஆயுதம் ஏந்த வேண்டும். இதுதான் எமது அறைகூவல் என்றார்.

## 6500 பரல்

யான பரிசோதனைக்கு பின்னரே பொருள்கள் கப்பலில் ஏற்றப்படுவதாக தெரிவித்த அரச அதிபர், மலத்தியோன் பவுடரைக் கூட நிலத்தில் கொட்டி பரிசோதித்த பின்னரே கப்பலில் ஏற்ற அனுமதித்தனர் என்றார்.

மேற்படி கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கி முடிந்ததும் கொழும்பு திரும்பும் இக்கப்பல் அங்கிருந்து 7000 பரல் மண்ணெய்யுடன் மீண்டும் விரைவில் வருமெனவும், யாழ். செயலகத் திருத்த வேலைக்கு தேவையான சீற், பெயின்ற், கண்ணாடி என்பவற்றுடன் உரத்தையும் ஏற்றிவரும் றுகுணு கப்பல் அடுத்தமுறை 2500 பரல் தேங்காய் எண்ணெய்யை ஏற்றிவருமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## சிறிலங்கா

இதனை அடுத்துப் பல கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு மாணவர்கள் பிடித்துச் செல்லப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் பல இடங்களில் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. பெப்ரவரி 4 ஆம் திகதி தமிழர்களின் கரிநாள் என்று குறிப்பிடப்பட்ட சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

போரைதீவுப்பற்று, பட்டிப்பளை, வவுணதீவு, வெல்லாவெளி, கோவளைப் பற்று உதவி அரசஅதிபர்பிரிவுகளில் எதிர்ப்பு நடவடிக்கை அதிக அளவில் இடம்பெற்றுள்ளது.

உயர்திரு. மூத்தவர் இராமநாதர்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்ப அங்கத்தவர்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

நிர்வாகி
ஆசிரியர்கள், மாணவர்கள்
ஸ்ரார் சயன்ஸ் சென்ரர்
அரியாலை

(7433)

மரண அறிவித்தல்

வைத்திலிங்கம் திருநாவுக்கரசு
(ஒய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)
(யாழ். மாநகர சபை)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் கந்தர்மடத்தில் வசித்துவந்தவருமாகிய வைத்திலிங்கம் திருநாவுக்கரசு காலமாகி விட்டார். அன்னார் நாகபூரணத்தின் (ராசாத்தி) அன்புக்கணவரும், சத்தியசீலன் (மருத்துவபீடம் 4ம் வருடம் - 10ம் அணி), சாந்தீபன் (பொறியியல் துறை மாணவன்), சுரேந்திரன் (நுண் உயிரியல் மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னம்மா (கமலம்), விமலநாயகி, தனபாலசிங்கம் நாகேஸ்வரி, கோமளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற அப்புத்துரை, சந்திரலிங்கம், யோகராசா, செல்லத்துரை, தனலட்சுமி பூரணலிங்கம், காலஞ்சென்ற ஈஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரகாந்தி, சந்திரநிவாஸன், சந்திரமாதேவி, சந்திரகுமார், தர்சினி, யோகினி: ஜெந்தினியின் அன்பு மாமனாரும், மயூரன் குருபரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவுமாவார். அன்னாரின் ஈமச்சடங்கு அவரது சுதுமலை இல்லத்தில் 06-02-94 இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"கண்ணிதோட்டம்"
சுதுமலை வடக்கு
மானிப்பாய். (7429)

தகவல்:
தி. சத்தியசீலன்
(மகன்)